## 20. பயிற்சியும் அனுபவமும் அவசியம்!

கோழியும் அதன் குஞ்சுகளும் சந்தோஷமாகத் திரிந்தன.
அழகான குஞ்சுகளைப் பார்த்து மற்ற பறவைகளும் மகிழ்ந்தன.
"குஞ்சுகளே! பார்த்து மேயுங்கள்! முடிந்தவரை அம்மாவுடனே இருங்கள், பெரிதானதும் தனியாகவே மேயலாம்" என்று கோழி அடிக்கடி கூறும்.
ஆனால் அந்த மஞ்சள் வண்ணக் குஞ்சுக்கோ எதையும் தானாகவே உட்னடியாகச் செய்வதில் ஆர்வம் அதிகம்.
அம்மாவுக்குத் தெரியாமல் அபல் முறை அது சில விஷயங்களைத் தனியே போய் செய்வதும் உண்டு.
ஒரு நாள் மதியானம்.
அம்மா கோழி தூங்கியது, மற்ற குஞ்சுகளும் தூங்கின.
மஞ்சள் குஞ்சு தனியாக வீட்டுக்கு வெளியே வந்து கொட்டிக் கிடந்த தானியங்களைக் கொத்தி சுவைத்து மகிழ்ந்தது.
அதோ....எங்கிருந்தோ வந்த கழுகு, குஞ்சைப் பிடிக்கக் கீழே பறந்து வர, கூடக் காகமும் வர, அப்போது பார்த்து வீட்டுக்காரர் வெளியே வர குஞ்சு தப்பித்தது.
அம்மாவிடம் ஓடிச் சென்று ஒடுங்கிக் கொண்டது.
"உண்மை தான், பயிற்சி இல்லாமல், பெரியவன் ஆகாமல் ஆபத்தை சமாளிக்கத் தெரியாமல் தனியாக வெளியே போகக் கூடாது, பொறுமையுடன் இருப்போம்!" என்று தன் புத்திக்குள் கூறிக் கொண்டது.